**செய்தி வெளியீடு எண்:600** நாள் 09.10.2012

## தாட்கோ மூலம் மானியத்துடன் கூடிய கடன் உதவி பெற விண்ணப்பிக்க கால அவகாசம் 21.10.2012 வரை நீடிப்பு

தாட்கோ மூலம் மானியம் வழங்குவதற்காக இந்த வருடம் ரூ.111.25 கோடி நிதியினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஒதுக்கீடு செய்துள்ளார்கள். இக்கடன் உதவி பெற 10.10.2012 வரை விண்ணப்பம் செய்யலாம் என்ற கால அவகாசம் **தற்போது 21.10.2012 வரை நீடிக்கப்பட்டுள்ளது.** மானியத்துடன் கூடிய இக்கடன் உதவி பெற விண்ணப்பிப்பவர்கள் இந்து ஆதிதிராவிடர்களாக இருக்க வேண்டும். கண்டிப்பாக 18 வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும். குடும்ப ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.1 இலட்சம் ஆகும். இத்திட்டத்தில் பயன்பெற விரும்புபவர்கள் {HYPERLINK "http://application.tahdco.com"} என்ற இணையதள முகவரிக்கு சென்று விண்ணப்பத்தினை ஆன்லைனில் பதிவு செய்யவேண்டும். பதிவு செய்யும் போது குடும்ப அட்டை எண் அல்லது இருப்பிட சான்று, சாதிச் சான்று, வருமானச் சான்று ஆகியவற்றின் எண், வழங்கப்பட்ட தேதி ஆகியவற்றை அதற்கான இடத்தில் அவசியம் பதிவு செய்யவேண்டும். அதுபோல் திட்ட அறிக்கை பெறப்பட்ட தேதியையும் அதற்கான இடத்தில் குறிப்பிடவேண்டும். புகைப்படத்தை ஸ்கேன் செய்து பதிவேற்றம் செய்ய வேண்டும். மாவட்டங்களுக்கு திட்டங்கள் வாரியாக ஒதுக்கப்பட்ட எண்ணிக்கையை தாண்டினால் அப்பதிவு ஏற்கபடாது. ஒரு குடும்ப அட்டையை வைத்து ஒரு குடும்பத்தில் ஒருவர் மட்டுமே விண்ணப்பிக்க முடியும். மகளிர் சுய உதவி குழு சுழல்நிதித் திட்டத்திற்கு விண்ணப்பிக்க விரும்பும் மகளிர் அனைவருமே 18 வயது நிரம்பியவர்களாக இருக்கவேண்டும்.

மாவட்டங்களில் உள்ள ஆதிதிராவிட மக்கள் தொகைக்கு ஏற்ப திட்டங்களுக்கு மாவட்ட வாரியாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனடிப்படையில் பல மாவட்டங்களில் **தேவையான அளவிற்கு விண்ணப்பங்கள் ஆன்லைன் மூலம் வரப்பெற்றுள்ளன. சில மாவட்டங்களில் சில திட்டங்களுக்கு விண்ணப்பங்கள் போதிய அளவில் வரப்பெறவில்லை** என்பதாலும் பொதுமக்களிடமிருந்து கால நீட்டிப்பு வேண்டும் என்ற கோரிக்கையினை ஏற்றும் தற்போது 21.10.2012 வரை கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

பரிசீலனைக்குப் பின்னர் விண்ணப்பங்கள் வங்கிகளுக்கு அனுப்பப்படும். வங்கிகள் கடன் வழங்க உத்தரவாதம் தெரிவித்தவுடன் மானியம் வங்கிகளுக்கு விடுவிக்கப்படும். நிதி ஒதுக்கீடு மீதம் இருக்குமானால் மீண்டும் விண்ணப்பங்கள் பின்னர் வரவேற்கப்படும்.

இவ்வாறு தாட்கோ மேலாண்மை இயக்குநர் திருமதி.ஆ.சுகந்தி, இ.ஆ.ப., தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**